ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2365/04 - 2024 ජනවාරි මස 02 වැනි අඟහරුවාදා - 2024.01.02

*2365/04 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம்**

5 ஆம் பிரிவின் கீழான கட்டளை

*2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ், எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், வர்த்தக, வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் பரிந்துரையின் பேரில் இயைபுமுறைக் குறியீடு 1006.30.29 இன் கீழ் வகுப்பாக்கம் செய்யப்பட்ட அரிசியினை இறக்குமதி செய்யும் போது, 2023, மே 17 ஆந் திகதிய 2332/14 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் கட்டளையிடப்பட்ட ஒரு கிலோவிற்கு ஏற்புடையதான 65 ரூபா விசேட வியாபாரப் பண்ட அறவீட்டிலிருந்து ஒரு கிலோவுக்கு 1 ரூபாவினை அறவிட்டதன் பின்னர் மீதமான தொகையினை விலக்களிப்பதற்கு கட்டளை ஒன்றினை விதிக்கின்றேன்.*

மேற்குறிப்பிடப்பட்ட விசேட வியாபாரப் பண்ட அறவீட்டிலிருந்தான இவ்விலக்களிப்பானது, வர்த்தக, வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் பரிந்துரையின் பேரில், இலங்கை இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக்கொண்ட எந்தவொரு இறக்குமதியாளரினாலும் மேற்கொள்ளப்படும் அரிசி இறக்குமதிக்குப் பொருந்தும் அதேவேளை இக்கட்டளை செல்லுடியாகும் திகதி அல்லது அதற்குப் பின்னரான திகதி குறிப்பிடப்பட்ட கப்பற் பொறுப்புப் பத்திரம் (BL)/ விமானப் பொறுப்புப் பத்திரத்துடன் (AWB) மேற்கொள்ளப்பட்ட அரிசி இறக்குமதியாகவும் இருத்தல் வேண்டும்.

*2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் உப பிரிவு (3) இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக 2024, சனவரி மாதம் 02 ஆந் திகதி முதல் ஆரம்பமாகும் வகையில் மேற்குறிப்பிடப்பட்ட கட்டளை 2024, சனவரி மாதம் 21 ஆந் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.*

**ரணில் விக்கிரமசிங்க,**
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசிய கொள்கைகள் அமைச்சர்.

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசிய கொள்கைகள் அமைச்சு,
கொழும்பு 01,
2024, சனவரி 01.

EOG 01-0031

1A - PG 6600 — 431 (2024/01)    இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.